**செய்தி வெளியீடு எண்.65** **நாள் : 26.03.2019**

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் அவர்கள் "மகாத்மா காந்தி – வாழ்க்கை வரலாறு" புகைப்படக் கண்காட்சியை இன்று (26.03.2019) சென்னை ஆளுநர் மாளிகையில் துவக்கி வைத்தார்.

நமது தேசத்தின் தந்தை மகாத்மா காந்தி அவர்களின் 150ஆவது பிறந்தநாளை நம் தேசம் 2018, அக்டோபர் 2ஆம் நாள் முதல் கொண்டாடி வருகிறது.

மகாத்மா காந்தியின் 150ஆவது பிறந்தநாள் விழா கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக "மகாத்மா காந்தி – வாழ்க்கை வரலாறு" புகைப்படக் கண்காட்சி ஆளுநர் மாளிகையில் ஏற்பாடு செய்யப்பட்டது. பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடையே மகாத்மா காந்தியின் வாழ்க்கை மற்றும் அதன் வாயிலாக நாம் அறிந்துகொள்ள வேண்டிய கருத்துக்கள் பற்றிய விழிப்புணர்வைப் பரவச் செய்வதே இக்கண்காட்சியின் நோக்கமாகும்.

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் அவர்கள் மாணவ மாணவியர்களுடன் கலந்துரையாடும்போது, "காந்தியடிகள் ஆங்கிலேய அரசை எதிர்த்துப் போராடி நம் இந்திய தேசத்திற்கு விடுதலையைப் பெற்றுத்தந்தது நம் வாழ்வின் அகத்தூண்டலாக அமைவுதுடன், உழைப்பின் மகத்துவம், வளங்களை சமமாகப் பங்கிடல், உள்ளூர் தன்னிறைவு மற்றும் அகிம்சையைக் கடைப்பிடித்தல் ஆகிய மாபெரும் தத்துவங்களைக் கொண்டதாக உள்ளது" என்றார்.

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் எப்பொழுதும் காந்தியடிகளின் இதயத்தில் தனி இடம் அளித்திருந்தார். அகமதாபாத்தில் காந்தியடிகள் சபர்மதி ஆசிரமம் தொடங்கியபோது அதில் இருந்த 25 நபர்களில் 13 பேர் தமிழர்களாவர் என்பதை நினைவுகூறுவது முக்கியமானதாகும். 1896 முதல் 1946 வரையான காலகட்டத்தில் காந்தியடிகள் 20 முறை தமிழகத்திற்கு வந்துள்ளார். 1896ஆம் ஆண்டு முதன்முதலாக அவர் தமிழ்நாட்டிற்கு வந்தபோது, அவர் தமிழ் கற்க முயற்சித்தார் என்றும் அதற்காக அவர் 9 தமிழ் புத்தகங்களை வாங்கினார். தொடர்ந்து அவர் 1921ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் மதுரைக்கு வந்தபோது, அங்கு அவர் கண்ட உழைக்கும் மக்களின் எளிய ஆடை அணியும் முறையை பின்பற்றி, ஒரு வேட்டியும், மேலாடையும் மட்டுமே

எளிமையாக அணிவதென முடிவெடுத்து இம்முறையை தனது வாழ்வின் இறுதிநாள் வரையில் கடைபிடிக்க முடிவெடுத்தார். இதுகுறித்து அவர் "என் வாழ்வில் நான் செய்த மாற்றங்கள் அனைத்தும் முக்கியமான சந்தர்ப்பங்களின் நான் கண்டவற்றின் தாக்கத்தினால் ஏற்பட்டதாகும், குறிப்பாக நான் ஆடை அணிவதில் ஏற்படுத்திக்கொண்ட தீவிர மாற்றம் மதுரையில் நான் கண்ட காட்சியின் விளைவாக ஏற்பட்டதாகும்" என்று எழுதியுள்ளார்.

கண்காட்சியில் மாணவர்களுக்கு ஒரு சிறப்பு நிகழ்வாக, இங்கு வருகைதந்த பார்வையாளர்கள், மாணவர்கள் அனைவரையும் ஆளுநர் மாளிகை மற்றும் அதனைச் சுற்றியுள்ள வனப்பகுதிகளைப் பார்வையிட அழைத்துச் செல்லப்பட்டனர்.

எஸ்.டி.என்.பி.வைஸ்னவ் கல்லூரி, வேப்பேரி குரு ஸ்ரீ ஜெயின் கல்லூரி, வேளச்சேரி குரு நானக் கல்லூரி, டி.ஜி.வைஸ்னவ் கல்லூரி மற்றும் சென்னை வேளச்சேரி மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி ஆகிய கல்வி நிலையங்களிலிருந்து 300க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் மாண்புமிகு ஆளுநர் புகைப்பட கண்காட்சியை தொடங்கி வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டனர். எதிர்வரும் 10 நாட்களுக்கு மேலும் அதிக எண்ணிக்கையிலான பள்ளி கல்லூரி மாணவர்கள் கண்காட்சியை பார்வையிடவுள்ளனர்.

---

ராஜ்பவன், சென்னை -22 ஓம்/-

நாள் :26.03.2019 இணை இயக்குநர் (ம.தொ)

**Press Release No.65** **Date : 26.03.2019**

Thiru. Banwarilal Purohit, Hon'ble Governor of Tamil Nadu inaugurated the photo exhibition on "Mahatma Gandhi – Life History" at Raj Bhavan, Chennai today (26.03.2019).

The Nation is celebrating the 150th Birth Anniversary of Mahatma Gandhi, the father of our nation, from October 2nd 2018.

As a part of the 150th Birth Anniversary Celebrations of Mahatma Gandhi, a Photo Exhibition on "Mahatma Gandhi - Life History" giving details of the life of Mahatma Gandhi has been organised at the Raj Bhavan. The aim of the exhibition is to create awareness and disseminate details about the life and message of Mahatma Gandhi among college and school students.

Thiru. Banwarilal Purohit, Hon'ble Governor of Tamil Nadu, in his interaction with the students said, "Gandhiji, who fought against British rule and brought freedom to India, is an inspiration to all of us. The Gandhian ideal encompassed the principles of dignity of labour, equitable distribution of wealth, local self sufficiency and the practice of non violence.

Tamil Nadu was always close to Gandhiji's heart. It is important to recall that when Gandhiji started the Sabarmati Ashram in Ahmedabad, in which there were initially 25 inmates, 13 of them were Tamilians. Gandhiji visited Tamil Nadu 20 times between 1896 and 1946. During his first visit in 1896 he tried to learn Tamil and bought 9 Tamil books for the purpose. During a subsequent visit in 1921, when in Madurai, Gandhiji made a change from donning the typical elaborate attire to wearing the simple dhoti

and upper cloth that clothed him for the remaining years of his life. About this he himself has written “All the alterations I have made in the course of my life have been effected by momentous occasions. Such a radical alteration in my dress I effected in Madurai.”

As a special attraction for the students, the visitors to the exhibition are taken around the Raj Bhavan and the adjoining forest areas.

More than 300 students from SDNP Vaishnav College, Guru Sri Jain College, Vepery, Guru Nanak College, Velacherry, DG Vaishnav College and Chennai Corporation Higher Secondary School, Velacherry visited the exhibition today at the time of the inauguration by the Hon’ble Governor. Many more school and college students will be visiting the exhibition in the next 10 days.

---

Raj Bhavan, Chennai -22 Sd/-

Date : 26.03.2019 Joint Director (PR)